நாள்.04.03.2026

**அசல் வழக்கு எண். 69/2017**

**பெயர்.மதியழகன்**

**த.பெ. முருகையன்**

**வா.சா.1– 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ராஜம்மாளின் கணவர் வெங்கடாச்சலம் எந்த வருடம் இறந்தார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. உயில் சம்பந்தமாக நான் பட்டுக்கோட்டை கோட்டாட்சியரிடம் எனது தரப்பு பதிலுரையை தாக்கல் செய்து கட்சி செய்தேன் என்றால் ஆமாம். RDO 02.12.2016ல் உயில் சம்பந்தமாக உத்தரவை பிறப்பித்து நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டார் என்றால் ஆமாம். அந்த உத்தரவு பற்றி எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். அந்த உத்தரவில் வழக்கு சொத்துகள் ராஜம்மாளுக்கு சொந்தமான சொத்து இல்லை அவரது கணவர் வெங்கடாச்சலம் என்பவருக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு அவர் பெயருக்கு பட்டா மாற்றவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ராஜம்மாள் பெயரில் மாற்ற வேண்டும் என்றுதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பட்டுக்கோட்டை துணை வட்டாட்சியர் என் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்தபோது யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் ராஜம்மாள் பெயரில் இருந்தது. அந்த சமயத்தில் ராஜம்மாள் பெயரில் இல்லை வெங்கடாச்சலம் பெயரில்தான் இருந்தது என்றால் அது தவறு.

ராஜம்மாள் அப்பா பெயர் வெள்ளக்குட்டி. அவர் மனைவி பெயர் வள்ளியம்மை. வள்ளியம்மை வெங்கடாச்சல வேளாளரின் சகோதரி என்றால் ஆமாம். வெள்ளக்குட்டி-வள்ளியம்மையின் வாரிசுகள் எத்தனைபேர் என்றால் 6பேர். முருகையன்-1, நாகலிங்கம்-2, ராமசாமி-3, அமிர்தலிங்கம்-4, காசியம்மாள்-5, ராஜம்மாள்-6. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலம் சம்பந்தமாக தீர்ப்பு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். உயில் சம்பந்தமாக நான் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கில் தேவையான தரப்பினர்களாக மேற்கண்ட 6 நபர்களையும் அவர்களது வாரிசுகளையும் தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்றால் 6 நபர்களும் இறந்துவிட்டார்கள். அவர்களது வாரிசுகள் அனைவரையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் 3 பேர்கள் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அதற்கு என்ன

காரணம் என்றால் RDO போட்ட உத்தரவுப்படி இந்த 3 பேர் மீது வழக்கு தாக்கல் செய்தேன்.

ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போதே அவருக்கு சொந்தமான ச.எண்.84/7 ல் 24.5 ஏர்ஸ் நிலத்தை நான் மோசடியாக எந்தவித ஆவணமும் இல்லாமல் என் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டேன் என்றால் இல்லை. என் பெயரில் பட்டா மாற்றும்போது நான் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் நான் ஆவணம் கொடுத்தேன். தண்ணீர்தீர்வை ரசீது கொடுத்தேன். ராஜம்மாள் பட்டுக்கோட்டை கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து என் பெயரிலுள்ள பட்டாவை மோசடியாக மாற்றப்பட்டது என்று நடவடிக்கை எடுத்து என் பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். அதிலிருந்து எனக்கும் ராஜம்மாளுக்கும் வருத்தம் என்றால் இல்லை. ச.எண்.84/7 எவ்வளவு விஸ்திரணம் என்றால் 60 செண்ட். எனக்கும் ராஜம்மாளுக்கும் பட்டா மாற்றம் சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் இல்லை. ஊரில் பஞ்சாயத்து வைத்தார்கள் நான் பொய் சொல்கிறேன் பஞ்சாயத்து மூலம் எனக்கு 40 செண்ட் நிலத்தை ராஜம்மாள் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை அவராக எழுதிக்கொடுத்தார்.

மீதமுள்ள 20 செண்டை இந்த வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இரண்டு கிரையமும் ஒரே நாளில் எழுதப்பட்டது என்றால் ஆமாம். பஞ்சாயத்து வைத்ததால்தான் ஒரே நாளில் கிரையம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் இல்லை. ராஜம்மாள் எனக்கு எப்போது உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் 25.03.2014. உயில் எழுதிய விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் இறந்தபிறகு 1 வாரம் கழித்து தெரியும். உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். உயிலை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் அவ்வளவாக தெரியாது. உயிலுள்ள விவரத்தை யார் மூலம் படித்து தெரிந்துகொண்டேன் என்றால் ஊரிலுள்ள ஒருவர் படித்துக்காண்பித்தார். அவர் பெயர் ஞாபகமில்லை. வழக்கு சொத்துகள் உயிலில் இருந்ததாக படித்து காண்பித்தார்களா என்றால் குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னார்கள்.

ராஜம்மாள் இறக்கும்வரை அவருக்கு சொந்தமான வீட்டில்தான் குடியிருந்தாரா என்றால் இருந்தார் அந்த வீடு பாழடைந்ததும் என் வீட்டில் இருந்தார். ராஜம்மாள் இறப்பதற்கு எவ்வளவு நாட்கள் என் வீட்டில்

இருந்தார் என்றால் 2 மாதம். இறந்த வருடம் 2014 என்றால் ஆமாம். கஜா புயல் எந்த வருடம் வந்தது என்றால் 2018. அப்போது ராஜம்மாள் வீடு இருந்ததா என்றால் டேமேஜாக(damage) இருந்தது. வழக்கு தாக்கல் செய்தபோது ராஜம்மாள் வீட்டில் யாரும் இல்லை என்றால் ஆமாம்.

எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 அயிட்டம். அதில் ராஜம்மாள் வீடும் வருகிறதா என்றால் இல்லை. அது வேற ச.எண் என்றால் ஆமாம். என் கட்சிப்படி ராஜம்மாள் சொத்துகள் அனைத்தும் எனக்கு உயில் மூலம் வந்தது என்றால் ஏன் ராஜம்மாள் வீடு மற்றும் அதன் புல எண்ணை சேர்க்கவில்லை என்றால் வீடு என்பதால் அதை சேர்க்கவில்லை. அது இல்லாமல் ராஜம்மாளுக்கு வேறு சொத்துகள் உள்ளதா என்றால் இல்லை. ராஜம்மாள் உயில் எழுதுவதற்கு முன்பு நலமாக இருந்தாரா என்றால் ஆமாம். உயில் எழுதும்போது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 70 இருக்கும். உயில் எந்த ஊரில் எழுதப்பட்டது என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் பட்டுக்கோட்டையில்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.